# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.97/2021

2026 –ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 24.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.விஸ்வநாதன் (PW–1 ) | வயது | : | 52/2025 |
| க/த பெயர் | : | திரு. பன்னீர்செல்வன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) வாதியின் முந்தைய பொது அதிகார முகவரான ராஜேந்திரன் மீது பிரதிவாதி பரவாக்கோட்டை காவல் நிலையத்தில் 03.10.2021 அன்று புகார் கொடுத்தபோது ராஜேந்திரன் சாட்சிகள் கபிர்தாஸ், தமிழரசன் ஆகியோர் முன்னிலையில் தாவா சொத்தின் அனுபவம் பிரதிவாதி வசம் இருப்பதாக எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்கண்ட விபரம் எனக்கு தெரிந்திருந்தும் நான் வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
2) வாதியின் முந்தைய பொது அதிகார முகவரான ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்த பொது அதிகாரத்தை ரத்து செய்து 28.12.2022 இல் அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியுள்ளதால் அதன் நகலோ, அதை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதியானவர் பிரதிவாதியிடம் 2000 ஆண்டு வாக்கில் ரூபாய் 5 லட்சத்தை பெற்றுக்கொண்டு தாவா சொத்தை பிரதிவாதிக்கு விற்பனை செய்ய ஒப்புக்கொண்டு தாவா சொத்தின் அனுபவத்தை பிரதிவாதி வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல.
3) வாதி தொடர்ந்து வெளிநாட்டில் வசித்து வந்ததால் அவர் பெயரில் பட்டா மாற்ற முடியாததால் பிரதிவாதிக்கு விற்பனை செய்ய காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதியானவர் வாதியின் எந்தவித இடையூறும் இல்லாமல் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.
4) வாதியின் தந்தையும் பிரதிவாதியின் உடன் பிறந்த சகோததருமான திருஞானம் அவர்கள் கடந்த 2020 இல் இறந்த பிறகு எனது

தூண்டுதலின்பேரில் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதியானவர் வாதிக்கு எதிராக தாவா சொத்து குறித்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து வாதிக்கு இந்நீதிமன்றத்தில் அழைப்பாணை பெற்ற பின்னர் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) தாவா சொத்தானது வாதியின் அனுபவத்தலோ அல்லது அவரின் முகவரின் அனுபவத்திலோ எந்த காலத்திலும் இல்லை என்றும், அவ்வாறு இருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. தாவா சொத்து அனுபவம் இல்லாத சூழலில் பிரதிவாதிக்கு எதிராக நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.24 18:10:23 +0530

District Munsif
Mannargudi.